( 1, 2 எதிரிகள் ஆஜர். )

Previous Date of examination : 03.11.2020

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவாரூர்**

**CC No.25 /2020 Date : 06.02.2024**

**PW 70 – திருமதி ராணி , காவல் ஆய்வாளர்**

**சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார். மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு, 1** வது **எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**(1)** இந்த வழக்கின் அ.சா.ஆ.17 முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தவர் உதவி ஆய்வாளர் அ.சா.67 மகாலெட்சுமி என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையான அ.சா.ஆ.17-ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள் 08.04.2019 என சொல்லப்பட்டுள்ளது, நேரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.67 மகாலெட்சுமி எனது விசாரணையில் அவர் பதிவு செய்த அ.சா.ஆ.17 முதல் தகவல் அறிக்கையை அவரோ, வேறு காவலர்கள் மூலமோ நீதிமன்றத்திற்கு அனுப்பியதாக எனது விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

**(2)** முதல் தகவல் அறிக்கையானது எவ்வாறு நீதிமன்றத்திற்கு வந்தது என்பது குறித்து எந்த சாட்சியாவது சொல்லியுள்ளார்களா? என்றால் சொல்லவில்லை. இந்த வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பாக இவ்வழக்கின் 1, 2 எதிரிகளுடைய கையொப்பம் எப்படி இருக்கும் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.2 ஆவணத்தில் சாட்சிகளின் கையெழுத்திற்கு கீழாக ஆங்கிலத்தில் ஒரு கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி கையொப்பமானது எதிரியிடையதா? என்பதை உறுதிபடுத்த நான் மாதிரி கையொப்பம் எதுவும் எதிரிகளிடமிருந்து பெறவில்லை என்றால் சரிதான். நீதித்துறை நடுவர் முன்பாக மாதிரி கையொப்பம் பெற்று கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 ஆவணங்களில் கண்ட ஆங்கிலத்தில் உள்ள கையெழுத்தானது 1 வது எதிரியின் கையெழுத்து என்பதை உறுதிபடுத்த கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

**(3)** அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 ஆவணங்களில் 1 வது எதிரியின் கையெழுத்து என நாங்கள் குறிப்பிடும் கையெழுத்தானது 1 வது எதிரியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. மேற்படி அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 ஆவணங்களில் உள்ள கையெழுத்தானது 1 வது எதிரியின் கையெழுத்து இல்லை என்பதால்தான் 1 வது

எதிரியிடம் மாதிரி கையொப்பம் பெற்று கையெழுத்து நிபுணருக்கு அனுப்பினால் அது அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் என்பதால் வேண்டும் என்றே நான் நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 ஆவணங்கள் இந்த வழக்கின் தன்மைக்கு ஏற்ப எங்களால் வாசகங்கள் எழுதி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2, அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6 ஆவணங்கள் எழுதப்பட்ட முத்திரை தாளானது 01.03.2019 தேதி வாங்கப்பட்டதாகவும், அ.சா.ஆ.3 ஆவணம் எழுதப்பட்ட முத்திரை தாளானது 04.02.2019 ம் தேதி வாங்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**(4)** அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 ஆவணங்கள் எந்த தேதியில் எழுதப்பட்டுள்ளது என்றால் ஒவ்வொரு ஆவணத்திலும் அது எழுதப்பட்ட தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.5 வரையான ஆவணங்களில் வருவாய் முத்திரை ஒட்டி அதில் கை விரல் ரேகை காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த ரோகையானது யாருடைய ரேகை என்பது குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் குறித்து 08.04.2019 ம் தேதி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 08.04.2019 ம் தேதி பதிவு செய்யப்பட்ட வழக்கிற்கு புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 29.03.2019 ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளரால் புகார் பெறப்பட்டுள்ளது. அ.சா.ஆ.1 புகாரில் பக்கிரிசாமி மகன் சுரேஷ் மட்டும்தான் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான்.

**(5)** அ.சா.1 சுரேஷ் இந்த வழக்கு சம்பந்தமாக அ.சா.ஆ.1 புகாரை கொடுப்பதற்கு முன்பாக மேற்படி வழக்கு சம்பந்தமான குற்ற நிகழ்வு வேறு யாரும் தகவல் கொடுத்ததாக தெரிந்துக்கொண்டேனா? என்றால் எனது விசாரணையில் அவ்வாறு தகவல் கொடுத்ததாக தெரியவரவில்லை. அ.சா.1 சுரேஷ் புகார் கொடுப்பதற்கு முன்பாக வேறு யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 சுரேஷ் கொடுத்ததாக சொல்லப்படும் அ.சா.ஆ.1 புகார் கொடுத்த தேதிக்கு முன்பாகவே சாட்சிகள் புகார்கள் கொடுத்துள்ளார்கள் என்றும், அந்த புகார்கள் அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் அதனை மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல.

**(6)** அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.6 ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்ததாக கூறப்படும் நபர்களுடைய மாதிரி கையொப்பங்களை பெற்று கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி உறுதிபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2, அ.சா.ஆ.6 ஆவணங்களில் சாட்சிகளாக அழகர் மற்றும் சக்திவேல் என்பவரும் , அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5 ஆவணங்களில் சாட்சிகளாக சுரேஷ் மற்றும்

சக்திவேல் என்பவரும் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

**(7)** அ.சா.30 ராதிகா எனது விசாரணையில் தனது போன் நம்பரையோ, அல்லது 1 வது எதிரியின் போன் நம்பரையோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் 1 வது எதிரியிடம் பேசினார் என எனது விசாரணையில் அ.சா.30 கூறவில்லை என்றால் சரிதான். 1 வது எதிரியிடம் அ.சா.30 ராதிகா பேசியதாக கூறுவதற்கு அழைப்பு விபரங்கள் எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.30 ராதிகா எனது விசாரணையில் 1 வது எதிரியிடம் போனில் பேசியதாக சொல்லவில்லை என்பதால் அது தொடர்பான ஆவணங்களை நான் கைப்பற்றவில்லை.

**(8)** அ.சா.36 ஜெய்சங்கர், அ.சா.52 தினேஷ் ஆகியோர் 1 வது எதிரியுடன் தாங்கள் தொலைபேசியில் பேசியது குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா? என்றால் எனது விசாரணையில் மேற்படி சாட்சிகள் போனில் பேசியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்பதால் அது குறித்து ஆவணங்களை நான் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் முறையாக விசாரணை மேற்கொள்ளாமலும், உரிய ஆவணங்களை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமலும், 1 வது எதிரி மீது தவறான குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒம்/- எல்.ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.